கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 2 நாள்: 15.09.2022

அமர்வு வழக்கு எண். 15/2021

| | |
|---|---|
| பெயர் சுந்தரி | த/பெ |
| வயது | தொழில் |
| ஜாதி | மதம் |
| கிராமம் | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் கொற்கை மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த கார்த்தி எனது கணவர். அ.சா.1 கலியமூரத்தி எனது மாமனார். எதிரிகளை தெரியும். 24.06.2019 அன்று இரவு நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது திடீர் என்று எங்கள் வீட்டுக்கதவை தட்டும் சத்தம் கேட்டது வீட்டிற்கு வெளியே வந்துப்பார்த்தபோது ஊர்க்காரர்கள் கூட்டமாக நின்றார்கள். அப்போது அவர்கள் என்னிடம் எனது கணவர் என் வீட்டிலிருந்து 4 வீடுகள் தள்ளி அடிப்பட்டு கிடப்பதாக சொன்னார்கள். அந்த சமயத்தில் இரவு 10 மணி இருக்கும் நான் உடனே என் கணவர் அடிப்பட்டு கிடப்பதாக சொன்ன இடத்திற்கு போய்பார்த்தேன் அங்கு என் கணவர் பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார் உடனே கார்வைத்து என் கணவரை மயிலாடுதுறை அரச மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் அங்கு மருத்துவர் பார்த்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னார். பின்னர் எனது கணவரின் பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்து எங்களிடம் ஒப்படைத்தார்கள். என் கணவர் இறப்பிற்கு யார் காரணம் என்பது இதுவரை எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் 24.06.2019 அன்று இரவு 9.15 மணியளவில் எனது கணவர் கார்த்தி கடைக்குசென்றுவிட்டு வருவதாக சொல்லிவிட்டு சென்றவர் வீட்டுக்கு திரும்பும்போது சேகர் வீட்டு வாசல் அருகே வந்தபோது குணசீலன், மணிவாசகன் இருவரும் கருப்பு கலர் இருசக்கர வாகனத்தில் வந்து ஏன்டா தேவடியா மகனே முத்துப்பிள்ளை மாந்தோப்பிலிருந்து நாங்கள் மாங்காய் திருடி விற்பதை ஏன் ஊருக்குள் சொல்கிறாய் என்று திட்டிக்கெண்டிருந்ததாகவும் சத்தம் கேட்டு நானும் எனது மாமனாரும் வெளியே வந்து பார்த்து ஏன் என் கணவரை திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அதற்கு முன்பாக என் கணவர் எதிரிகளிடம் தான் உங்களைப்பற்றி ஊருக்குள் தவறாக எதுவும் சொல்லவில்லை என்று சொன்னதாகவும் எதிரிகள் இருவரும் இந்த குச்சிக்காரி மகனிடம் என்ன பேச்சு என்று சொல்லிக்கொண்டு என் கணவரைப் பார்த்து இத்தோடு தொலைந்துபோடா என்று சொல்லி என் கணவரின் நெஞ்சில் கையால் மாறிமாறி தாக்கியதாகவும் எதிரி குணசீலன் எனது கணவரின் நெஞ்சில் ஓங்கி பலமாக குத்தியதாகவும் அதனால் எனது கணவர் நிலைத்தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும் எதிரிகள் இருவரும் எனது கணவரின் மார்பில் மாறிமாறி மிதித்ததாகவும் நாங்கள் சத்தம் போட்டதைப் பார்த்து எதிரிகள் ஓடிவிட்டதாகவும் பின்னர் நானம் என் மாமனாரும் என் கணவரை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றதாகவும் அங்கு என் கணவரை மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு என் கணவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னதாகவும்இதுக்குறித்து என் மாமனார் போலிசில் புகார் கொடுத்ததாகவும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

எங்கள் வீட்டுக்கு கூட்டமாக வந்து கதவை தட்டிய சமயத்தில் நான் தூங்கிக்கொண்டிருந்தேன் எனது மாமனார் எங்கள் வீட்டில்தான் இருக்கிறார் கதவு

தட்டப்பட்ட சமயத்தில் என் மாமனாரும் தூங்கிக்கொண்டிருந்தார். மேற்கூறிய தகவல் சொன்னதும் தூங்கிக்கொண்டிருந்த என் மாமனாரை நான்தான் எழுப்பி என் கணவர் கிடந்த இடத்திற்கு கூட்டிச் சென்றேன்.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 3 நாள்: 15.09.2022

அமர்வு வழக்கு எண். 15/2021

| | |
|---|---|
| பெயர் சேகர் | த/பெ |
| வயது | தொழில் |
| ஜாதி | மதம் |
| கிராமம் | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் கொற்கை மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன். கலியமூரத்தி மற்றும் எதிரிகளை தெரியும் ஊர்க்காரர்கள். கார்த்தி எவ்வாறு இறந்தார் என்பது எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள் இதைத்தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் 24.06.2019 அன்று இரவு 9.15 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் உட்கார்த்திருந்தபோது எங்கள் தெரு கார்த்தி கடைக்குசென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பும்போது எங்கள் வீட்டு வாசல் அருகே வந்தபோது குணசீலன், மணிவாசகன் இருவரும் கருப்பு கலர் இருசக்கர வாகனத்தில் வந்து ஏன்டா தேவடியா மகனே முத்துப்பிள்ளை மாந்தோப்பிலிருந்து நாங்கள் மாங்காய் திருடி விற்பதை ஏன் ஊருக்குள் சொல்கிறாய் என்று திட்டிக்கெண்டிருந்ததாகவும் சத்தம் கேட்டு நானும் சுந்தரியும் கலியமூர்த்தியும் பார்த்து ஏன் கார்தியை திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் இருவரும் இந்த குச்சிக்காரி மகனிடம் என்ன பேச்சு என்று சொல்லிக்கொண்டு கார்தியை பார்த்து இத்தோடு தொலைந்துபோடா என்று சொல்லி கார்த்தியின் நெஞ்சில் கையால் மாறிமாறி தாக்கியதாகவும் எதிரி குணசீலன் கார்த்தியின் நெஞ்சில் ஓங்கி பலமாக குத்தியதாகவும் அதனால் கார்த்தி நிலைத்தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும் எதிரிகள்

இருவரும் கார்த்தியின் மார்பில் மாறிமாறி மிதித்ததாகவும் நாங்கள் சத்தம் போட்டதைப் பார்த்து எதிரிகள் ஓடிவிட்டதாகவும் பின்னர் நாங்கள் கார்த்தியை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றதாகவும் அங்கு கார்த்தியை மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னதாகவும் இதுக்குறித்து கலியமூர்த்தி போலிசில் புகார் கொடுத்ததாகவும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 4 நாள்: 15.09.2022

அமர்வு வழக்கு எண். 15/2021

| | |
|---|---|
| பெயர் அருள் | த/பெ |
| வயது | தொழில் |
| ஜாதி | மதம் |
| கிராமம் | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் கொற்கை மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன். கலியமூர்த்தி மற்றும் எதிரிகளை தெரியும் ஊர்க்காரர்கள். கார்த்தி எவ்வாறு இறந்தார் என்பது எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள் இதைத்தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில் 24.06.2019 அன்று இரவு 9.15 மணியளவில் நான் சேகர் வீட்டு அருகில் நானும் வடக்குத்தெரு ரகுபதியும் பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் தெரு கார்த்தி கடைக்குசென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பும்போது எங்கள் வீட்டு வாசல் அருகே வந்தபோது குணசீலன், மணிவாசகன் இருவரும் கருப்பு கலர் இருசக்கர வாகனத்தில் வந்து ஏன்டா தேவடியா மகனே முத்துப்பிள்ளை மாந்தோப்பிலிருந்து நாங்கள் மாங்காய் திருடி விற்பதை ஏன் ஊருக்குள் சொல்கிறாய் என்று திட்டிக்கெண்டிருந்ததாகவும் சத்தம் கேட்டு நானும் சுந்தரியும் கலியமூர்த்தியும் பார்த்து ஏன் கார்தியை திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு உங்களைப்பற்றி ஊரில் நான் எதுவும் சொல்லவில்லை என்று கார்த்தி சொன்னதாகவும் அதற்கு எதிரிகள் இருவரும் இந்த குச்சிக்காரி மகனிடம் என்ன பேச்சு என்று சொல்லிக்கொண்டு மணிவாசகம் கார்த்தியை பிடித்துக்கொள்ள குணசீலன் தான் இடுப்பில் மறைத்துவைத்திருந்த பாட்டிலை எடுத்து இருவரும் சேர்ந்து கார்த்தி வாயில் பாட்டிலில் இருந்ததை ஊற்றி கார்த்தியை அடித்துத் தள்ளியதாகவும் கார்தியை பார்த்து இத்தோடு

தொலைந்துபோடா என்று சொல்லி கார்த்தியின் நெஞ்சில் கையால் மாறிமாறி தாக்கியதாகவும் எதிரி குணசீலன் கார்த்தியின் நெஞ்சில் ஓங்கி பலமாக குத்தியதாகவும் அதனால் கார்த்தி நிலைத்தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும் எதிரிகள் இருவரும் கார்த்தியின் மார்பில் மாறிமாறி மிதித்ததாகவும் நாங்கள் சத்தம் போட்டதைப் பார்த்து எதிரிகள் ஓடிவிட்டதாகவும் பின்னர் நாங்கள் கார்த்தியை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றதாகவும் அங்கு கார்த்தியை மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னதாகவும் இதுக்குறித்து கலியமூர்த்தி போலிசில் புகார் கொடுத்ததாகவும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை.